பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 13 வெள்ளிக்கிழமை 26.04.2024 கதிர் 170

உண்மைகளை வெளிக்கொணர

# பிள்ளையானை உடன் கைது செயயுங்கள்

## நாடாளுமன்றில் சாணக்கியின் எம்.பி. வலியுறுத்து

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் பிள்ளையானைக் கைதுசெய்து விசாரணை நடத்தினால் இது தொடர்பான அனைத்து உண்மைகளையும் தெரிந்துகொள்ளலாம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண வழக்கும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே திருகோணமலை வழக்கு மே 31 வரை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண வழக்கு ஜீன் 20 வரை ஒத்திவைக்கப்பட்டது.

கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளை உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியன் தாக்கல் செய்த இந்த மனுவில் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடை கோரியிருந்தார். பின்னர் அந்தத் தேசிய மாநாடு நடைபெறாத காரணத்தால், வழக்கு திகதியிடப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று வழக்கு மீண்டும் விசாரிணைக்குவந்தபோது, ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் நீதிமன்றிற்கு வந்திருக்கவில்லை. எனவே அவருக்கான அழைப்புக் கட்டளையை திருகோணமலையில் உள்ள அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அனுப்பும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா தங்கள் தரப்பு ☞ 2

## சவூதிக்குப் பறக்கிறார் அமைச்சர் அலி சப்ரி

உலகப்பொருளாதாரப்பேரவையின் உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வலுத்திறன் தொடர்பான விசேட கூட்டத்தில் பங்கேற்பதற்காக அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி சவுதி அரேபியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

உலக பொருளாதாரப்பேரவையின் ஏற்பாட்டில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் ஏப்ரல் 28, 29 திகதிகளில் நடைபெறவுள்ள இவ்விசேடகூட்டமானது உலகளாவிய ரீதியில் பல்துறைசார் பிரதிநிதிகளையும், தொழிற்துறை தலைவர்களையும் ஒன்றிணைக்கும் எனவும், உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய சிக்கலான பிரச்சினைகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு வாய்ப்பளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளார்.

இவ்விசேட கூட்டத்தில் 'நகர்ப்புற எதிர்காலத்தைக்கட்டியெழுப்புதல்' மற்றும் 'வடக்கிலிருந்து தெற்கு – கிழக்கிலிருந்து மேற்கு நம்பிக்கையை ☞ 2

## பொருளாதார நிலமைகள் சுமுகமாகி விட்டனவாம்

நாட்டின் பொருளாதார நிலமைகள் சுமுகமாகி உள்ளன, தரவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன என்றுஅரசபெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு பணப்புழக்கத்தை முகாமைத்துவம் செய்வதில் திறைசேரி கடும் சவாலை எதிர்கொள்கிறது. தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும், பணத்தை அச்சிடவும் முடியாமலிருப்பதே அதற்குக் காரணமாகும். நலன்புரி மற்றும் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் அதிகமாகக் காணப்பட்டாலும், நாட்டில் சரியான முறையில் நிதி நிர்வாகம் செய்யப்படுகிறது.

மீள்கட்டமைப்புச் செலவுகள் குறித்து கவனம் செலுத்தி 2024 முதல்காலாண்டை 2020 முதல் காலாண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 2024 முதல் காலாண்டில் மீள் கட்டமைப்புச் செலவுகள்

# கடவுளின் நீதிமன்றில் இருந்து எவருமே தப்பிக்க முடியாது

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கடவுளின் நீதிமன்றில் இருந்து எவரும் தப்பிக்க முடியாது என்று எதிர்க்கட்சிகளின்பிரதானகொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான சபைஒத்திவைப்புஇரண்டாம் நாள் விவாதத்தில் ☞ 8

# கர்தினாலின் குற்றச்சாட்டுகளை முற்றாக மறுக்கின்றார் கோட்டா

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இஸ்லாமிய கடும்போக்குவாதிகள் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்று குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கர்த்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் தொடர்புகொண்டு தான் கூறினார் என்றுவெளியாகிய விடயங்களையும் நிரகாரிக்கிறார் என்றுதெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நினைவுகூரும் ஆராதனையில் பேராயர் கர்தினால் ஆண்டகை ஆற்றிய உரையில் ☞ 8

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில்

# படையினர் – தாக்குதல்தாரிகள் இடையில் பொது இணக்கப்பாடு

## இப்படக் கூறுகிறார் அனுர குமார

பாதுகாப்பு தரப்பிற்கும், தாக்குதல்தாரிகளுக்கும் இடையிலான பொது இணக்கப்பாட்டுடனேயே உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் ☞ 2

# மக்கள் மீள போராட்டம் நடத்தாதவாறு பொருளாதாரத்தைக் கட்டமைப்போம்

### நட்சத்திர அதிசொகுசு விடுதி திறப்பு விழாவில் ரணில் உரை

மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஏற்படாதவாறு பொருளாதாரத்தைக் கட்டமைப்போம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஐ.ரி.சி.ரத்னதீப அதிசொகுசு ஹோட்டல் கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.ரி.சி. நிறுவனத்தை இலங்கைக்கு வரவேற்கிறேன். ☞ 2

# வெளிநாட்டு ஆசை காட்டி மோசடி செய்வோரைக் கைது செய்யுங்கள்

### அதிகாரிகளுக்கு அமைச்சர் மனுஷ பணிப்பு

வெளிநாட்டுவேலை வாய்ப்புகளை வழங்குவதாக கூறி மோசடியான முறையில் பணம் சம்பாதிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளுக்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டுவேலை வாய்ப்புகளை வழங்குவதாக பொய்யாக கூறி பணம் சம்பாதிக்கப்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள புலனாய்வுக் குழுவுடனான கலந்துரையாடலின் போதே, மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுவேலை வாய்ப்புக்கானபணத்தை பெறுவதற்கு உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என அமைச்சர் சுட்டிக்காட்டினார். மேலும், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

தினமும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்குவதாக பொய்யான வாக்குறுதிகளின் பணம் பெறப்படுவது குறித்து எங்களுக்கு ☞ 2

## வடக்கு ஆளுநர் செயலக பணியாளர் ஒருவர் காயம்

வடமாகாணஆளுநர் செயலகப் பணியாளர் ஒருவர் கழுத்தில் காயமடைந்தநிலையில் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆளுநரின் யாழ்ப்பாண அலுவலகத்தின் பணியாளர் ஒருவரைத் துப்பரவுப் பணியில் ஈடுபடும் நபர் ஒருவர் தாக்கினார் என்று தம்மிடம் ☞ 8

## சம்பளத்துடன் சம்பந்தனுக்கு 3 மாத விடுமுறை

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சம்பந்தனுக்கு சம்பளத்துடன் கூடிய மூன்று மாதகால விடுமுறை வழங்க நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

எதிர்க்கட்சியின் பிரதான ☞ 2

## நிலுவையில் உள்ள வழக்கு முடிந்தால் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தியாகும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குவிசாரணையை முடித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கினால் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்று கல்விஅமைச்சர்கலாநிதி சுசில் பிரேமஜயந்த் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பியவாய்மூலகேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

33 அபிவிருத்தி உத்தியோகத் ☞ 8

## இனி இது .....

கருத்துக்களை முன்வைக்க கால அவகாசம் கோரினார். அதற்கு அவகாசம் வழங்கி ஜீன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆக மொத்தத்தில் இரண்டு வழக்குகளுமே இன்-னும் பல மாதங்களுக்கு இழுபடக்கூடிய சாத்தியக்கூறுகள்தான்தெரிகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாவது இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வருமாஎன்பதுஇன்னும்தெளிவாகத் தெரியவில்லை.

................................

இது கட்சிகளின் வழக்குக் காலம் என்பதால் மாறி மாறி வழக்குகள், தடைகள் வந்துகொண்டே இருக்கின்றன. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச்செயற்படமைத்திரிக்கு 2ஆவது தடை விதிக்கப்பட்டதும், அவரது அணியினர் சார்பில் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட விஜயதாச ராஜபக்சவுக்குத் தடை விதிக்கப்பட்டதும் வாசகர்களுக்குத் தெரிந்தவையே.

கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்குத் தடை விதிக்கப்பட்ட அதேசமயத்தில் கட்சியின் பதில் செயலாளராகப் பணியாற்றிவந்த துஷமந்த மித்திரபாலவுக்கும் தடை விதிக்கப்பட்டது. அவரும் மைத்திரி, விஜயதாச அணியைச் சேர்ந்தவரே. இதையடுத்து சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க நிமல் சிறீபாலடிசில்வா தரப்பினரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுஒருபுறம்என்றால்சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரான நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச பொது ஜன பெரமுனவின் உறுப்பினர். அந்தக் கட்சியின் மூலமே நாடாளுமன்றஉறுப்பினருமானவர். அப்படியிருந்தும் மற்றொரு கட்சியின்தலைவராக அவர் சென்று பதவியேற்றிருக்கிறார் என்பதால் பெரமுனவுக்குள் அவருக்கு எதிராகக் கடும் கொதிப்புக் கிளம்பி இருக்கின்றது.

அவரைக் கட்சியைவிட்டு நீக்கி, கடுமையாகத் தண்டிக்க வேண்டும் பெரமுனவினர் குமுறத் தொடங்கியிருக்கிறார்கள். உடனடியாக அவர் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கட்சித் தலைமைக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். ஆனால் தலைமையோ, அப்படி விஜயதாஸவை நீக்கினால் அது தொடர்பில்நீதிமன்றத்தில்வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என்று கருதும்கட்சித்தலைமை,ஏற்கனவே பலகட்சிகளும்நீதிமன்றப்படியேறி வருகையில் தாமும் அதில் போய் ஏன் சிக்கிக் கொள்வான் என்று நினைக்கிறதாம்.

அதனால் விஜயதாச மீது உடனடியாக எந்தக் கட்சிநடவடிக் கையும் பாயாது என்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பிள்ளையானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019ஆம்ஆண்டில்நடந்திருந்தாலும் அதனுடன் தொடர்புடைய குழுக்கள் 2005ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் செயற்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில் அடிக்கடி கூறியிருந்தாலும் இதன் பாரதூர தன்மை தொடர்பில் புரிந்துகொள்ளாது இருக்கின்றனர். எவ்வாறாயினும்தற்போது 2014ஆம் ஆண்டில் நடந்த சம்பவமொன்று தொடர்பில்மீண்டும்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புலனாய்வுத் துறையுடன் சம்பந்தப்பட்ட மூன்று இனங்களையும்சேர்ந்தபுலனாய்வுக் குழு அதிகாரிகளின் குழுவொன்றே இந்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்துள்ளன.

2004ஆம் ஆண்டில் ஈமானிய நெஞ்சங்கள் என்ற அமைப்பொன்று அமைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பாயிஸ், ஆமி மொஹிதீன், கலீல் ஆகிய மூவரையும் உள்ளடக்கியதாக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. கலீல் என்ற நபர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் சிறைக்குச் சென்று விடுதலையானவர்.

2009ஆம் ஆண்டில் திருகோணமலையில் 6 வயது வர்ஷா என்ற சிறுமி பெற்றோரிடம் கப்பம் கோரி கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலைக்குப்பொறுப்பான மோர்வின் என்பவர் கைது செய்யப்பட்டார் ஜனார்த்தனர், நிஷாந்தன்,ரெஜினோல்ட்ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னர் பொலிஸாரின் பொறுப்பிலிருந்தபோதே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை 8 வயது சிறுமி ஒருவரும் கப்பம் கோரி 2009இல் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அந்த சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பின்னர் அவர்கள் நால்வரும் அரச படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

புலனாய்வு பிரிவின் குழுவினர் தமது நோக்கத்திற்காகக் கப்பம் பெறும்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன், அதன் பின்னர் கைது செய்யப்படுபவர்களைக் கொல்லும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பலர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவங்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் இடையே என்ன தொடர்பு என்று நினைக்கலாம். ஆனால் 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டு கிழக்கில் ஸ்திரமற்ற நிலைக்குக் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறாகப் பரிசோதிக்கப்பட்ட விடயங்களே பின்னர் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன. பிள்ளையான் உள்ளே இருந்தால் அவர் பலவற்றை கூறலாம் என்பதனால் அவரை விடுதலை செய்ய நடவடிக்கையெடுத்துள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் பிள்ளையானுடன் கைது செய்யப்பட்ட கஜன் மாமா என்பவர் சிலமாதங்களுக்குமுன்னர்திடீரென உயிரிழந்துள்ளார். உடற்கூறு பரிசோதனைக்கு இடமளிக்காது அவரின் உடலை எரித்துள்ளனர்.

அதனால் 2005ஆம் ஆண்டு முதல் ஈஸ்டர் தாக்குதல் வரை இடம் பெற்ற கொலை சம்பவங்களுக்குத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குத் தொடர்பு இருக்கிறது. அதனால் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்த கட்சியின் தலைவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தினால் இது தொடர்பான அனைத்து உண்மைகளையும் தெரிந்துகொள்ளலாம். எனவே மட்டக்களப்பு மாவட்டவாக்குகளைப் பார்க்காமல் ஜனாதிபதி அவரை கைதுசெய்து விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

## சம்பளத்துடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்.

91 வயதாகும் இரா.சம்பந்தன் முதுமையின் தளர்வால் தற்போது சுகயீனமடைந்துள்ளார்.

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விவாதிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்தப்பட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியாக 09 நாட்கள் விவாதிக்கப்பட்டது.

இருப்பினும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் சனல் 04 ஆவணப்படம் வெளியாகியுள்ளது. பிள்ளையான் புத்தகம் வெளியிட்டுள்ளார். பிரதான சூத்திரதாரியை நாங்கள் அறிவோம் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.

குண்டுத்தாக்குதல்பின்னணியில் அரசியல் இல்லை என்று குறிப்பிட முடியாது. குண்டுத்தாக்குதலை தோளில் சுமந்து சென்றவர்களை முறையாக விசாரணை செய்தால் உண்மையை கண்டு பிடிக்கலாம்.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின்பின்னர்ராஜபக்சக்களின் அரசியல் செயற்பாடுகள் முஸ்லிம் அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம், சிங்கள இனத்துக்கு அச்சுறுத்தல் என்பதை மையப்படுத்தியிருந்தது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இதன் உச்சக் கட்டம்.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட தன் பின்னரே 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெறுபேறு எழுதப்பட்டது. குண்டுத்தாக்குதலுக்கு அப்போதைய அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, சட்டம்மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த தாக்குதலுக்கு இரு தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். குண்டுத்தாக்குதல் குறித்து தகவல் அறிந்திருந்தும் அதனை தடுக்காத தரப்பினர், தாக்குதல்தாரிகள் ஆகியோர் இவ்விரு தரப்பினராவர். தகவல் அறிந்திருந்தும்பாதுகாப்புதரப்பினர் தாக்குதலை தடுக்கவில்லை. ஆகவே பாதுகாப்பு தரப்பினரின் ஒத்துழைப்புடன் தாக்குதல்தாரிகள் தாக்குதலை நடத்தினார்களா என்ற சாதாரண சந்தேகம் எழுகிறது.

குண்டுத்தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் வவுணத்தீவு பகுதியில் இரு பொலிஸ் அதிகாரிகள் பயங்கரவாதி சஹ்ரானின் தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகள் திரிபுபடுத்தப்பட்ட நிலையில் முன்னெடுக்கப்பட்டது.

தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு தாக்குதலை நடத்த சென்ற ஜமீல் அங்கு தாக்குதலை நடத்தாமல் தெஹிவளை பகுதிக்குச் சென்றுள்ளார். ஜமீல் குண்டை வெடிக்கச் செய்வதற்கு முன்னரே அவரது வீட்டுக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

மாத்தளை பொடி சஹ்ரானை தொடர்பு கொண்டு புலனாய்வு அதிகாரி ஒருவர் இந்த தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்குமாறு அழுத்தம் பிரயோகித்துள்ளார். ஆகவே பாதுகாப்பு தரப்பிற்கும், தாக்குதல் தாரிகளுக்கும் இடையிலான பொது இணக்கப்பாட்டுடனேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

மறுபுறம் சாரா ஜஸ்மீன் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்பதுசந்தேகத்துக்குரியது. ஆகவே தாக்குதல்தாரிகளுக்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையில் தொடர்பு உள்ளதா என்ற சிக்கலுக்கு தீர்வு காணாமல் உண்மையை கண்டறிய முடியாது.

உண்மையை கண்டறிவது பிரச்சினைக்குரியதாகவே உள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவும், அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களின் சகாவான ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரிவுகளுக்கு அமைய மக்களாணையில்லாமல் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். உண்மையை கண்டறிய வேண்டுமாயின் மக்களாணையுடனான ஆட்சி பதவிக்கு வரவேண்டும்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மீது தற்போது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோது முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக வன்முறையை தூண்டி விடும் செயற்பாடுகள் ஒரு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது. நீர்கொழும்பு, புத்தளம், மினுவாங்கொட ஆகிய பகுதிகளில் திட்டமிட்ட வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் பேராயர் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். அவர் மாத்திரம் தலையிடாமல் இருந்திருந்தால் நாட்டில் குருதி ஆறு ஓடியிருக்கும்.

கோட்டபய ராஜபக்ச மீது மக்கள் நம்பிக்கை இழந்ததால் அரகலய தோற்றம் பெற்றது. மக்கள் அவரை விரட்டியடித்தார்கள். கோட்டா தன்னை ஏமாற்றினார் என்று பேராயர் குறிப்பிட்டதன் பின்னர் அவருக்கு எதிராக ஆளும் தரப்பினர் பேசுகிறார்கள். 2019ஆம் ஆண்டு காலப்பகுதியை மறந்து விடக்கூடாது என்றார்.

## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, இந்த விவகாரங்கள் குறித்து விவாதித்து முடிவெடுப்பதற்காக விரிவான விசாரணைக் குழுவைக் அமைத்துள்ளோம்.

அண்மையில் இஸ்ரேல் வேலைவாய்ப்பு மோசடி தொடர்பான அதிகளவிலான முறைப்பாடுகளை பெற்றோம். அநுராதபுரத்திற்கு அண்மித்த ஒரு குறிப்பிட்ட பன்சலைக்கு அண்ணளவாக அறுநூறு பேர் அழைத்து வரப்பட்டதாகவும், அதற்குஅந்தபன்சலபிரதமகுருவின் தலையீடு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், பொலிஸ் துறையைச் சேர்ந்தவர் என கூறி மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்காக பணம் பெற்றுள்ளனர்.

தேரரின் பெயரையோ பொலிஸ் நிலையத்தையோ அல்லது பிரதேசத்தையோ நாங்கள் வெளியிடுவதில்லை. எவ்வாறாயினும், யாராவது இதுபோன்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அல்லது இந்த சூழ்நிலையில் யாருக்காவது பணம் கொடுத்திருந்தால்,முறைப்பாடுகளை செய்ய உடனடியாக SLBFE தொடர்பு கொள்ளவும். அல்லது

வெளிநாட்டுவேலைவாய்ப்பைப் பெறுவதற்காக யாராவது பணம் செலுத்தியிருந்தால், உடனடியாக றீஸியய்சிக்கு வந்து முறைப்பாடுகளை எங்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். யாரேனும் அவ்வாறு பணம் செலுத்தியிருந்தால், தயவு செய்து விரைந்து முறைப்பாடு செய்யும். குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இந்த முறைப்பாடுகள் அவசியம்.

இந்த விடயம் தொடர்பில் அனுராதபுரம்தொடர்பானபல்வேறு மூலங்களிலிருந்தும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. எனினும், எங்களுக்கு இதுவரை முறையான முறைப்பாடுகள் வரவில்லை. எனவே, முறையான முறைப்பாடுகளை உடனுக்குடன் வழங்க வேண்டும். நீங்கள் அத்தகைய ஊழலுக்கு ஆளாகியிருந்தால், உங்கள் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், தயவுசெய்து வேலைவாய்ப்பு பணியகத்தின் புலனாய்வு திணைக்களத்துக்கு சென்று முறையீடுங்கள் என்றார்.

## சவூதிக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளக்கட்டியெழுப்புதல்' ஆகிய தலைப்புக்களில் நடைபெறவுள்ள இரு அமர்வுகளில் அமைச்சர் அலி சப்ரி பங்கேற்கவுள்ளார்.

அதேவேளை இப்பயணத் தின்போது சவுதி அரேபியா மற்றும் ஏனைய நாடுகளின் உயர் மட்டப் பிரதிநிதிகளுடன் அமைச்சர் அலி சப்ரி இருதரப்பு சந்திப்புக்களையும் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமாத்திரமன்றி ரியாத்தில் வாழும் இலங்கையர்களையும் அவர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது ஆசியாவின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டலான காலி முகத்திடல் ஹோட்டலுக்கு முன்பாக அமைந்துள்ளது. அதற்கு அருகில் இந்திய தாஜ் ஹோட்டலும் உள்ளது. சிங்கப்பூர் ஹோட்டலான சங்கரிலாவும் அருகில் அமைந்துள்ளது. அதற்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஐ.ரி.சி. ஹோட்டலின் பின்புறத்தில் சினமன் கிரேண்ட் ஹோட்டலும் அமைந்திருக்கிறது.

இவை அனைத்தும் இலங்கையின் ஹோட்டல் தொழில்துறைக்குள் உள்ளடங்கும். ஒபரோய் ஹோட்டல் இலங்கையில் அமைக்கப்பட்டு முதலாவது நகர ஹோட்டலாக மேம்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீண்ட காலத்திற்கு பின்னர் இந்தியாவே இங்கு சுற்றுலா ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. அதனால் இந்தியா, சிங்கப்பூரை தளமாக கொண்ட ஹோட்டல்களும் இங்கு அமைந்துள்ளன. ஆசியாவில் எங்கும் இவ்வாறான தொரு இடத்தை நீங்கள் காண முடியாது.

இதனால் கொழும்பு நகரம் சுற்றுலா கேந்திரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவிற்குள் நிர்மாணிக்கப்பட்ட 10,000 அறைகளை கொண்ட ஹோட்டல் கட்டடத்திற்கு பின்னர் அடுத்தபடியாக அவர்கள் செல்லக்கூடிய சிறந்த இடமாக ஐ.ரி.சி. நிறுவனம் இலங்கையை தெரிவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அவர்களால் மேம்படுத்தக்கூடிய பல இடங்கள் இலங்கையில் அமைந்துள்ளன. அடுத்ததசாப்தத்தில் இலங்கை ஜனாதிபதி மாளிகை மாதிவெலவிற்கு கொண்டு செல்லப்படும். அத்தோடு கொழும்பு குடியரசு சதுக்கம், கடற்படை தலைமையகம், பழைய இறங்குதுறை, சுங்கத் தலைமையகம், தபால் நிலையம் என அனைத்தையும் கொழும்பின் சுற்றுலா அங்கமாக மேம்படுத்த முடியும்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்களின் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்த பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

தற்போதும் கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பலகாணப்படுவதால்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# வடக்கில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் திறப்பு

## மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்திய மக்கள்

வட மாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும் அந்தப் பிரதேச மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

அதன்படி, 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இதற்கமைய வவுனியா மாவட்டத்தில் 6 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோநீர்சுத்திகரிப்புநிலையங்களும்கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டம் வடக்கு மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன் அவர்கள் சுத்தமான குடிநீருக்காக இதுவரை காலமும் அனுபவித்து வந்த துயரங்களுக்கும் முடிவு கட்டியுள்ளது.

வடமாகாணத்தில்இடம்பெயர்ந்தமக்கள்மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவை வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா வடக்கு, வெங்கலச்சிக்குளம், வவுனியா தெற்குஆகிய செயலாளர்பிரிவுகளிலும்கிளிநொச்சிமாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

'அனைவருக்கும்பாதுகாப்பானகுடிநீர்'என்றஅரசாங்கத்தின் எண்ணக் கருவின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின்படி அந்த அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவு சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இநதத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில்50நனோநீர்சுத்திகரிப்புநிலையங்கள்அமைக்க திட்டமிடப்பட்டது. இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன. இதன் மொத்த திட்ட மதிப்பு 211 மில்லியன் ரூபாவாகும். முன்னதாக, கடந்த ஆண்டு இறுதியில், முதல் கட்டமாக, 26 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் 16,480 குடும்பங்கள் பயனடைவார்கள்.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டவை என்று மீள்குடியேற்ற பிரிவு தெரிவிக்கிறது.

நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிப்பு செய்யும் போது நீரிலிருந்து அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பின் மூலம் நச்சுக்கள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

இந்தத் திட்டத்தை பெற்றுக்கொண்ட சில கிராமங்களின் மக்கள்தமதுமகிழ்ச்சியையும்நன்றியையும்வெளிப்படுத்தினர்.

உருத்திரபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரான இராமச்சந்திரன் இந்தத் திட்டம் தொடர்பில் கூறுகையில் -

நாங்கள் இந்தக் குடிநீர்த் திட்டத்தை நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்தோம். இத்தத் திட்டம் 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது கிட்டத்தட்ட 4 மில்லியன் ரூபா நிதிச் செலவில் இந்த நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. என்னைப் பொறுத்தளவில் உருத்திரபுரம் கிழக்கில் குடிநீர் பிரச்சினை என்பது பெரும் பிரச்சினை.

கிணறுகளிலே நீர் இருந்தாலும் கோடை காலங்களில் குடிக்கக் கூடிய சூழலில் இந்த நீர் இருப்பதில்லை. நீண்ட தூரங்களுக்கு மக்கள் சென்று அந்த நீரைப் பெற்று வரக்கூடிய சூழலே இப்போதும் இருந்து வருகிறது.

இன்று அந்த நிலைமை மாற்றமடைந்து மக்கள் அந்த இடத்திலேயே நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இந்தத் திட்டம் மக்களிடம்கையளிக்கப்படக்கூடியசந்தர்ப்பத்தில்ஜனாதிபதிக்கு நாங்கள்முதலில்நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் நாங்கள் இந்த இடத்தில் மனமார்ந்த நன்றிகளைச் சொல்ல வேண்டும். ஏனெனில் அவருடைய கடும் முயற்சியால் தான் இந்;தத் திட்டம் கொண்டு வரப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இந்த இடத்தில் விசேட நன்றிகளையும் மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார்.

செல்வா நகர் முதியோர் சங்கத்தின் செயளாலரான க. பூமிநாதன் கூறுகையில் -

தற்போது இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை செல்வா நகர் பின்தங்கிய கிராமத்திற்கு ஏற்படுத்தித் தந்த நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், ஏனைய கிராமிய மட்ட அமைப்புகளுக்கும் இத்திட்டத்திற்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது சங்கத்தின் சார்பிலும் செல்வா நகர் மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டம்கிடைக்கப்பெற்றதுமிகவும்மகிழ்ச்சிதருகிறது.இங்கு சுத்தமான நீர் இல்லாததால் இப்பகுதி மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய துன்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலம் நீங்கிவிடும். - என்றார்.

பெண்கள் ஆர்டிஎஸ் இல் பொருளாளராக இருக்கும் சுந்தரராசா அகல்யா தனது கருத்தை முன்வைக்கையில் -

எங்களது கிராமத்தில் நிறைய பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கெல்லாம் காரணம் குடிநீர் பிரச்சினைதான். இந்த நனோ தொழில்நுட்பத்தின் மூலம் வழங்கப்பட்ட பில்டரின் மூலம் இந்த நோய்க்கான தீர்வையும் காணலாம். எங்கள் மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட இது ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வழிகாட்டலின் கீழும் மற்றும் திலீபன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டலின் மூலம் எங்களுக்கு 40 லட்ச ரூபாவுக்கு மேற்பட்ட இந்த நிதித் தொகையை எங்களது இந்தக் கிராமத்திற்கு வழங்கி இருக்கிறார்கள். இது பெரியளவில் எங்கள் கிராம மக்களுக்கு ஓர் உதவியாக அமையும். எனவே இதற்கு உதவிய அனைவருக்கும் இந்த நேரத்தில் மக்கள் சார்பாகவும் பிரதேச செயலகம் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார்.

செல்வா நகர் செல்வ செழிப்பு நீர் வழங்கல் சங்கத்தின் தலைவர் மு. சிவபாலன் கூறுகையில் -

அனைவருக்கும் குடிநீர் வழங்கல் தேசிய திட்டத்தின் கீழ் எங்களுடைய செல்வா நகர் செல்வச் செழிப்பு நீர் வழங்கள் சங்கத்துக்கு பாரிய இத்திட்டத்தை வழங்கிய இன்றைய அரசாங்கத்துக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது போல இந்தத் திட்டத்துக்கு எங்களுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அரச அதிகாரிகள் அனைவருக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று கூறுவார்கள். அதற்கு ஒப்பாக இன்று முதல் எங்கள் கிராம மக்கள் அசுத்த குடிநீரினால் ஏற்படும் நோய்களில் இருந்து விடுபட்டு வாழ்வார்கள் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. - என்றார்.(05)

# ஒலுவில் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பயனாளர்களுக்கு பொதுக் கிணறுகள் வழங்கல்

## கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பால்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகரித்திருக்கின்ற நீர்க் கட்டணத்தாலும், ஒலிவிலில் சில பிரதேசங்களில் மிக நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர் சம்பந்தமான பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தரும்பொருட்டு சம்பந்தப்பட்ட பயனாளிகள் பொதுக்கிணறுகள் அமைத்துத்தருமாறு கல்முனை ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வைடபிள்யுஎம்ஏ பேரவையின் ஒருங்கிணைப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனைமாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கல்முனைரஹ்மத்பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மிகவும் குறுகிய நாள்களுக்குள் பொதுக்கிணறுகளை நிர்மாணித்து குறித்த பயனாளிகள் பாவனைக்காகத் திறந்து கையளித்து வைத்தார்.



இதன்போது பயனாளிகள், ஒலுவில் பிரதேசவாசிகள், நலன்விரும்பிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள், என பலர் கலந்துகொண்டனர். (05)

# ஓய்வுபெறுகிறார் தாஸீம்



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேசசெயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமை புரிந்து வந்த எம்.எல். தாஸீம் தனது 34 வருடகால அரசசேவையில் இருந்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வு புதன்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலகக்; கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிராம சேவை உத்தியோகத்தர் தரம் 01ஐச் சேர்ந்த இவர் 1964 ஆம் ஆண்டு 04 ஆம் மாதம் 25 ஆம் திகதி சுலைமாலெப்பை லைலத்தும்மா மற்றும் அலியார் மீராலெப்பை ஆகியோருக்கு மகனாக சம்மாந்துறையில் பிறந்தார். இவர் தனது ஆரம்பகல்வியை சம்மாந்துறை அல் மர்ஜான் மத்திய கல்லூரியிலும், பின்னர் தனது இடைநிலைக ;கல்வியை சம்மாந்துறை மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றார்.

இவர் 1990 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 03 ஆம் திகதி நில அளவை திணைக்களத்தில் பட வரைவாளராக சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 04 ஆம் திகதி கிராம சேவகர் பரீட்சையில் சித்தியடைந்து கிராம சேவகராக சம்மாந்துறை பிரதேசசெயலகத்தில் கடமையாற்றியதோடு 2013 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் பதில் நிர்வாக கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி புதன்கிழமையுடன் ஓய்வு பெறுகின்றார்.

தற்போது சம்மாந்துறை மஸ்ஜித் நகர் பள்ளிவாசல் தலைவராகவும், சம்மாந்துறை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளராகவும் செயற்படுகின்றார். அமைதியான சுபாவம் கொண்ட இவர் கடமையில் கண்ணியமாகவும், நேர்மையாகவும் செயற்படுபவர் என்பதோடு எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழககூடிய ஒரு நல்ல மனிதர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை பிரதேச செயலக கிராம சேவகர் நலனோம்பல் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் உதவி பிரதேசசெயலாளர் யூ.எல். அஸ்லம், கணக்காளர் எஸ்.எல். சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சமுர்த்திதலைமைப் பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைன், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.றினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரி எப்.சாஹிரா காணி எம் சவாஹீர் உட்பட கிராமசேவகர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தலைவர்களைத் திருத்தவேண்டும்

இலங்கையில் உள்ள பல கட்சிகள் இன்று நீதிமன்றப் படிகளில் ஏறி வருகின்றன. அவற்றின் கட்சி நிர்வாகம் மற்றும் அரசியல தொடர்பில் ஏற்பட்டுள்ள பிணக்களைத் தீர்ப்பதற்காகவே அவை நீதிமன்றம்சென்றுள்ளன. தமிழ், சிங்களக்கட்சிகள் அதிலும் இரு தரப்பிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பில் பேச்சுக்களை நடத்துகின்ற கட்சிகளே இன்று இவ்வாறு நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்குள் சிக்கித் தவிக்கின்றன.

இனப் பிரச்சினையைப் பேசித்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டாலும் பேசித் தீர்ப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்கிறார்கள். ஆனால் அப்படி இனப் பிரச்சினையைப் பேசித் தீர்வைக் காண வேண்டிய தலைவர்களை உள்ளடக்கிய கட்சிகளில் பலவே இன்று தமது உட்கட்சி விவகாரங்களுக்காக நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொண்டுள்ளன.

தமது கட்சிப் பிணக்குகளையே பேசி ஒரு தீர்வை எட்ட முடியாத இந்தக் கட்சிகள் 60 வருடங்களுக்கும் மேற்பட்ட இனப் பிரச்சினைக்கு எப்படி பேச்சு மூலம் தீர்வைக் காண்பார்கள்? ஒரே கட்சிக்குள், ஒரே கருத்தியலை, ஒரே கொள்கையைக் கொண்டவர்களாக இருந்தபோதும் அவர்களால் தமக்கிடையிலான முரண்பாடுகளைப் பேசித் தீர்க்க முடியவில்லை. தீர்வைக் கேட்டு நீதிமன்றங்களை நாடி வரும் நிலையில், வெவ்வேறு கட்சிகளில் இருந்துகொண்டு, வெவ்வேறு கருத்தியலையும் கொள்கைகளையும்கொண்டிருக்கும்தலைவர்கள் பேசி இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெறுவார்கள் என்று எண்ணுவது வெறும் கானல் நீர் போலத்தான்படுகின்றது.

கட்சிக்குள்ளும் சரி கட்சிக்கு வெளியிலும்சரி பதவி ஆசைதான் தலைவர்களை ஆட்டிப் படைக்கின்றது. இதனால்தான் பெரும்பாலான முரண்பாடுகள் தோன்றுகின்றன. பேசித் தீர்க்க முடியாதஅளவிற்குபிரச்சினைகள்வலுப்படுகின்றன. பதவி ஆசையை இரண்டாம்பட்சமாக்கி மக்கள் நலனை முன்னிறுத்துபவர்களாகத் தலைவர்கள் மாறாதவரைக்கும்அவர்களின்கட்சிகளுக்குள்ளும் கட்சிக்கு வெளியே இனப் பிரச்சினை போன்ற விடயங்களிலும் தீர்வுகளை இந்தத் தலைவர்கள் காண்பது அரிதுதான்.

எனவே ஓர் அரசியல் தீர்வுக்காக மக்களைத் தயார்ப்படுத்துவதற்கு முனனதாகத் தலைவர்களைத்தான் தயார்ப்படுத்த வேண்டும். முரண்பாடுகளைப்பேசித்தீர்த்துக்கொள்வதற்கான பயிற்சிகளும், கருத்தரங்குகளும் இப்போது அவர்களுக்குத்தான் அவசியமாக இருக்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு அவர்களைப் பயிற்றுவித்துப் பழக்கப்படுத்த வேண்டியிருக்கின்றது. இதனை யாராவது செய்வதற்கு முன்வருவார்களேயானால் மட்டுமே எதிர்காலத்திலாவது இவர்கள் இனப் பிரச்சினை போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண்பார்கள் என்று நம்பிக்கை கொள்ளமுடியும்.

# அரசியல் வியாபாரிகள்

## என் சத்திய மூர்த்தி

சிவாஜி கணேசனின் திருவிளையாடல் திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். 'விறகு வாங்கலியோ, விறகு... தாயே, விறகு வாங்கலியோ, விறகு...' ஒரு விறகுவெட்டியாக உருவெடுத்து வரும் சிவபெருமான் மதுரையம்பதியில் அரங்கேற்றிய திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று.

இன்று, தமிழ் அரசியல் கட்சிகள் குறித்து சுமந்திரன் கூறியதை படித்தபோது, அந்தத் திரைப்படக் காட்சிதான் நினைவிற்கு வந்தது. 'விறகு வாங்கலியோ...' என்பதற்கு பதில் 'கட்சி வாங்கலியோ..' என்று போட்டுப் பாருங்கள், அப்போது தெரியும் தமிழர் அரசியலின் தற்போதைய பரிதாப நிலைமை.



சரி, சுமந்திரன் கூறியதுதான் என்ன? ஒரு ஊடக பேட்டியில், தான்சார்ந்ததமிழ்அரசு கட்சியின் தலைவர் தேர்தலில் இருந்து விலகிக் கொள்ள பல்வேறு விதங்களில் அழுத்தம் கொடுக்கப்பட்டதாக அவர் மறைமுகமாக கூறினார். அதன் ஒரு பகுதியாக, அவர் விருப்பப்பபட்டால், தற்போது இருக்கும் ஏதாவது ஒரு தமிழ் கட்சியை விலைக்கு வாங்கி அவருக்கு தாரை வர்க்கவும் தயாராக இருப்பதாக, அவரிடம் சொல்லப்பட்டது.

இது போன்ற கருதுத்தொனியில் பல்வேறு வதந்திகள் தமிழ் அரசு கட்சி தேர்தல் காலத்திலேயே பரவி இருந்தன. அதிலும் குறிப்பாக, புலம்பெயர்ந்தோரிடையே முதலீட்டாளர்கள் நேரடியாகவே களத்தில் இறங்கி உள்ளார்கள் என்றும், அவர்கள் தங்களது பண மூடைகளை அவிழ்த்து விட்டுள்ளார்கள் எனவும் சமூக வலை தளங்களில் கூறப்பட்டது.

அது என்ன, ஒரு கட்சியை விலைக்கு வாங்குவது? இலங்கை அரசியலுக்கும், ஏன், தமிழர் அரசியலுக்கும் இதுவொன்றும் புதிதல்ல. கடந்த நல்லாட்சி காலத்தில், சுதந்திர கட்சியில் இருந்து பிரிந்து மஹிந்த ராஜபக்ச, மொட்டு கட்சியை துவங்கிய போது, அப்போது தேர்தல் ஆணையத்திடம்பதிவுசெய்யபப்பட்ட ஒருகட்சியின் சின்னத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கிதான், தனது புதிய கட்சியை முன்னெடுத்தார்.

தமிழர் அரசியல் மட்டும் என்ன வாழ்கிறது? இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகள், முன்னாலே வெளயேறியிருந்த ஈபிஆர்எல்எப் மற்றும் சிலர் இணைந்து 'ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு' என்று ஒரு புதிய கட்சியை உருவாக்குவதாக அறிவித்தனர். ஆனால், ஈபிஆர்எல்எப்கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் உள்ளிட்ட சிலபல கட்சிகள், 2008-தொடங்கிய கட்சியின் பெயரையும் அந்தக் கட்சியின் 'குத்து விளக்கு'; சின்னத்தையும்தான் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆனால், அவற்றிற்கும் தற்போது சுமந்திரன் கூறியுள்ள விடயத்திற்கும் நிரம்ப வேறுபாடு உள்ளது. குறிப்பாக, இன்றுள்ளது போல் அன்று, யாரும் மூன்றாவது கட்சியை விலைக்கு பேசியதாக யாரும் கூறவில்லை. சென்னை கோலிவுட் தமிழ் திரையுலக சரித்திரம் அறிந்தவர்களுக்கு இது புரியும்.

கவர்ச்சிகரமான தலைப்பு, ராசியான தலைப்பு என்று தயாரிப்பாளர் கவுண்சிலில் புதிய திரைப்படத்தில் தலைப்புகளை பதிவு செய்துவிட்டு, சென்னை பாண்டி பஜாரில் சிங்கிள் டீக்கு அலையும் மகானுபாவர்கள் உண்டு. அவர்கள் பதிவு செய்த தலைப்புகள் ஏதாவது புதிய திரைப்படத்திற்கு பொருத்தமாகவோ, ராசியாவோ இருக்கும் என்று தயாரிப்பாளர் தரப்பு நினைத்தால், இந்த ஆன்மாக்களின் விலை ஆயிரங்கள் தொடங்கி, இலட்சம் அல்லது கோடிகளில் கூட முடியலாம்.

### இரண்டு கேள்விகள்

சுமந்திரனின் கூற்றில்; இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று, எல்லோருக்கும் எழும் கேள்விதான். கட்சித் தலைவர் தேர்தல் நடந்து, அதில் எதிர் வேட்பாளரான சிறீதரன் வெற்றி பெற்று சில கிழமைகள் சென்ற பின்னர், சுமந்திரன் எதற்கு இவ்வாறு கூறுகிறார். அவர் கூறுவது உண்மையாகவே இருந்தாலும், அதனை அன்றே போட்டு உடைத்திருக்க வேண்டாமா?

அதுதான் அப்படி என்றால், சுமந்திரன் கூறிய கருத்தின் சாராம்சம்தான் தமிழர்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தும் விடயம். அதாவது, தான் தலைவர் தேர்தலில் இருந்து பின்வாங்கினால், தனது இஷ்டத்துக்கு இராஜ்ஜியம் ஆள, தனியாக ஒரு கட்சியை தொடங்குவதற்கு உதவுவதாக அவரிடம் கூறப்பட்டது.

அதிலும் குறிப்பாக, புதிதாக ஒரு கட்சி துவங்கி, அதனை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து, அதற்கு என்று ஒரு தேர்தல் சின்னத்தையும் பதிவு செய்வதற்காக, வழமை போல், அடுத்த வருட தொடக்கம் வரை காத்திருக்கத் தேவையில்லை. அதாவது, இடைப்பட்ட காலத்தில் வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் கூட சுமந்திரனின் புது கட்சி தன்னுடைய 'சொந்த' சின்னத்தில் போட்டியிடலாம்.

இத்தனையையும் கூறிய சுமந்திரன், தனக்கு தூது அனுப்பின புலம்பெயர்ந்த அரசியல் வியாபாரியின் பெயரை கூற மறுத்துள்ளார். காரணம், அவரை தான் நேரில் சந்திக்கவும் இல்லை. நேரில் உரையாடவும் இல்லை. அவருடைய பெயரை கூறி வந்த நபருடனேதான் பேசி, தனது மறுதலித்தலை பதிவு செய்ததாக கூறி உள்ளார்.

### சட்டதரணியா, அரசியல்வாதியா?

இவ்வாறு சுமந்திரன் கூறியது நியாமாகவே படுகிறது. ஜனாதிபதி சட்டதரணியான அவருக்கு, தான் கூறும் விடயங்களை நாளை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியதன் கட்டாயம் புரிந்தே இருக்கும். அதாவது, அவர் ஒருவருடைய பெயரை கூற, அந்த நபரோ, தனக்கும் இந்த பிரச்சினையில் உள்ளிருந்த இடைதரகருக்குமே எந்தவித உறவும் இல்லை என்று கூறிவிட்டால், சுமந்திரனின் கதி அதோகதி தான்.

இங்கு தான், சுமந்திரன் என்ற சட்டதரணி முன்னிற்கிறார். ஆனால், இங்கு தான் அரசியல் வாதியான சுமந்திரன் அடிப்பட்டு போய்விடுகிறார். அவருடைய இடத்தில், ஒரு நாலம் தர அரசியல்வாதி இருந்திருந்தால், புதிய ஒரு கட்சியோடு நிறைய பணத்தையும் வாங்கி கொண்டு, அரசியலில் இருந்தேவிடைபெற்றிருப்பார். அவரே இரண்டாவது, மூன்றாவது தர அரசியல்வாதியாக இருந்திருந்தால், சிறிது கூட ஆழம் பார்த்திருப்பார்.

அதாவது, தனக்கு நூல்விட்டு பார்க்கும் அந்த பெரும் பணக்காரர் யார், அவருடைய உண்மையான நோக்கம் தான் என்ன, என்பன போன்ற உண்மைகளை சுமந்திரன் அவருடன் நேரடி பேச்சுவார்த்தை மூலம் அறிந்திருக்க முடியும். இதுவே, இந்தியாவாக இருந்திருந்தால், அந்த பேச்சுகளை, இரகசிய வீடியோ அல்லது ஆடியோ டேப்-பாக கசிய விட்டிருப்பார்கள். இதில், சுமந்திரனை விட மற்ற பார்ட்டி மிகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் இருந்திருக்கலாம்.

கூறு கட்டி விற்க...

சுமந்திரன் இது தொடர்பில் தனி மனித மற்றும் தொழில் முறை கண்ணியத்தை காட்டியிருக்கிறார். அதனை காத்திருக்கிறார். வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதனால், அவர் தற்போது முன்னெடுத்துள்ள விடயம் முடியாமலே போய்விடும் நிலைமை தோன்றி உள்ளது.

சுமந்திரனின் பேட்டியை மேற்கோளிட்டுஈ

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் வியாபாரிகள்

4ம் பக்க தொடர்ச்சி...........

யாராவது நீதிமன்றத்தை அணுகினால், அப்போது, அவர் தனக்கு தெரிந்த விடயங்கள் அனைத்தையும் வெளியிட சட்டரீதியாக நிர்பந்திக்கப்படுவார். அதாவது, நாட்டின் ஜனநாயக மரபுகளையும் உரிமைகளையும் கூறு கட்டி விற்பதற்கு யாராரோ முயற்சி செய்கிறார்கள் என்ற வகையில், நீதி மன்றத்திற்கும், ஏன் தேர்தல் ஆணயத்திற்கும் கூட இது விடயத்தில் தலையிட தார்மீக உரிமை மட்டுமல்ல, கடமையும் உண்டு.

இதே விடயம், தென்னிலங்கை ஊடகத்தில் பெரிய அளவில் பேசப்படுமேயலனால், அதனை தேர்தல் ஆணையம் மட்டுமல்ல, அரசின் பல்வேறு உளவு துறைகளும் கூட கூர்ந்து நோக்கும். அதாவது, புலம்பெயர்ந்தோர் பெயரில் விடுதலை புலிகள் அமைப்பின் சார்பில் யாராவது, நாட்டில் தமிழர் அரசியலுக்கும் இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கப் பார்க்கிறார்களா, என்ற அளவில் கூட அவர்கள் யோசிப்பார்கள் என்று கருதலாம்.

அத்தகைய சூழ்நிலையில்கூட, சுமந்திரனிடம் அவர் கூறியவற்றின் விளக்கம் கோரப்படலாம். அதன் அடிப்படையில், விசாரணைகள் நடந்தேறலாம். ஆனால், அவை குறித்து எல்லாம், அதிகம் பேசுவதற்கான தருணமே உருவாகவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

### சங்கிலி தொடர்

இவ்வாறெல்லாம் நடக்கிறதோ, இல்லையோ, தமிழர் அரசியல் எவ்வளவு தரம் தாழ்ந்து வருகிறது என்பது சுமந்திரன் கூற்றில் இருந்து தெரிகிறது. எப்போது அவர் குறிப்பிட்டுக் கூறவில்லையோ, அப்போதே இது போன்ற ஒரு கீழ் தர அரசியல் சதியில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறீதரன் பங்குபெறவில்லை என்றே கருதவேண்டும்.

அவ்வாறு இல்லை என்றால், அதனையும் சுமந்திரன் தான் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு 'இன்ஸ்டால்மென்ட்'-டில் அல்லாமல் அனைத்து விடயங்களையும ஒரேயடியாக அவர் போடடு உடைக்கவேண்டும். அதாவது, தேர்தல் ஆணைக் குழுவோ, நீதிமன்றமோ அல்லது அரசு புலனாய்வு துறையினரோ அதற்கு முன்னரே அவரை அணுகாமல் இருந்தால்...

ஒருவிதத்தில் சொல்லப்போனால், இத்தகைய நிகழ்வுகளை சிறீதரன் தலைமையே முற்றிலுமாக கண்டனம் செய்யவேண்டும். இன்று சுமந்திரன் என்றால், நாளை வேறொருவர், மறுநாள் பிறிதொருவர் என்று இந்த சங்கிலி தொடரும். அதில் சங்கிலியின் ஏதோ ஒரு முடிச்சில் அவருடைய பெயரும் சிக்கிக் கொள்ளலாம். இப்போதைய நிகழ்வுகளை பாராமுகமாகக் கண்டுகொள்ளாமல் இருந்தால், நாளை, சிறீதரன் குய்யோ, முறையோ என்று முறையிட நேர்ந்தால், அவருக்கு தோள் கொடுக்க யாரும் இருக்க மாட்டார்கள்.

இதுவே, தமிழ் அரசுக்கும் அப்பால், அனைத்துத் தமிழ் அரசியில் கட்சிகளுக்கும் ஏன் சமுதாய அமைப்புகளுக்கும் பொருந்தும். இன்று, முகம், மனம், மதம், அரசியல் பாரம்பரியம், கொள்கை என்று பல்வேறு காரணங்களைக் காட்டி, சுமந்திரனின் குற்றச்சாட்டைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், தங்களது நிலைமையும் இதுவே என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

அந்த வகையில், அரசியலில் வியாபாரிகள் இருக்கலாம். வியாபாரிகளும் அரசியலில் இருக்கலாம். ஆனால், அரசியல் வியாபாரிகள் என்பது தமிழர் அரசியலுக்கே புதிய விடயம். கிரிக்கெட் மொழியில் கூற வேண்டுமென்றால், இது போன்ற வியாபாரிகள் 'மேட்ச்-பிக்சிங்' செய்து பிழைப்பவர்கள்.

அதிலும் அவர்கள் புலம்பெயர்ந்தோராக இருக்கும் போது, அவர்கள் தனி நாடு என்று காசு பெறாத பிரச்சினைக்காக இன்னமும் எத்தனை தமிழர் உயிர்களைக் காவு கேட்கப் போகிறார்கள்? அதற்கு முன்னதாக, வெளிநாடுகளில் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் தங்களது இரண்டு, மூன்று தலைமுறைச் சந்ததியினரை, இலங்கை குடியுரிமையுடன் மட்டுமே இந்நாட்டில் தமிழர் பகுதிகளில் என்றென்றைக்கும் வாழ வைப்பார்களா? அதன் பின்னர் இங்குள்ள குட்டி கட்சிகளின் விலை குறித்து அவர்கள் பேசட்டும்.

# திருகோணமலையில் விபத்து பாடசாலை மாணவி காயம்

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராஜவரோதயம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் 15 வயது பாடசாலை மாணவி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

குறித்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

வீதியை கடக்க முற்பட்ட போது வான் ஒன்று மோதியதில் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. வானுடன் மோதுண்டதில் 15 அடி தூரமளவில் குறித்த மாணவி தூக்கி வீசப்பட்ட நிலையில் இந்த விபத்து இடம்பெற்றமை சீசிடீவி கானொளி மூலம் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக கண்டியை சேர்ந்த (வயது - 32) வான் சாரதி திருகோணமலை தலைமையகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த மாணவி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். குறித்த விபத்துக்குள்ளான வானை பொலிஸார் கைப்பற்றினர் எனவும் கைதான சாரதியை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# டெங்கு ஒழிப்ப நடவடிக்கையில் வவுனியாப் பொலிஸார் ஈடுபாடு



வவுனியா பொலிஸாரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் அதிகளவிலான மக்கள் வந்து செல்லும் புதிய பஸ் நிலையப்பகுதியில் குறித்த நடவடிக்கை புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாய பொலிஸ் குழுவால் குறித்த செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வவுனியா பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சமுதாய பொலிஸ் குழுவினரும் இதில் கலந்துகொண்டு டெங்கு கட்டுபாட்டு நடவடிக்கைளில் ஈடுபட்டனர். இதில் புதிய பஸ் நிலையம், கண்டி வீதியோரம் என்பவற்றில் வீசப்பட்டிருந்த போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பன அகற்றப்பட்டதுடன், நீர் வடிகால்களும் சுத்தம் செய்யப்பட்டன.

(05 - 100)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# மோட்டார் சைக்கிள் ஓட்ட பந்தய போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடத்துக்கு கௌரவம்

### வீடு சென்று வாழ்த்திய அலி சப்ரி றஹீம்





(எம்.எச்.எம் சியாஜ்)

தியத்தலாவயில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டியில் 125 சிசி மோட்டார் சைக்கிள் ஓடி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற புத்தளம் கொத்தாந்தீவைச் சேர்ந்த கமால்தீன் ஹம்தானை நேரில் பாராட்டும் முகமாக அவரது இல்லத்திற்கு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நேரில் சென்று புதன்கிழமை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களை பாராட்டும் நிகழ்வு கூடிய விரைவில் புத்தளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இதன்போது தெரிவித்தார்.(05)

# சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்த தங்குஸ் வலைகளுடன் ஒருவர் கைது

### கற்பிட்டியில் சம்பவம்

(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டியில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருந்த தங்குஸ் வலைகள் அடங்கிய 55 உறைகளையும் அதனுடன் தொடர்பானவர் என்ற சந்தேகத்தின் பெயரில் மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவரையும் புதன்கிழமை பிற்பகல் கற்பிட்டி பொலிஸாரின் சுற்றிவளைப்பில் கைப்பற்றப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

கற்பிட்டி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ் எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினரான வன்னிநாயக்க, பஸ்நாயக்க கற்பிட்டி கடற்படை முகாம் லெப்டினன் டப்யூ.டி.எம்.பி வன்னிநாயக்க அதிகாரி டப்யூ.ஈ.ஜீ.என்.என் கருணாசேன மற்றும் கற்பிட்டி கடற்றொழில் பரிசோதகர் டி.ஆர்.யி.என் சமன் புஸ்பகுமார ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கற்பிட்டியைச் சேர்ந்தவருக்கு சொந்தமான களஞ்சியசாலை அறை ஒன்றை வாடகைக்குப் பெற்று அதில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 1870 கிலோ எடை கொண்ட தடை செய்யப்பட்ட தங்குஸ் வலைகள் அடங்கிய 55 உறைகள் கைப்பற்றப்பட்டதுடன் அதில் தங்கி இருந்த மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் புத்தளம் கடற்றொழில் காரியாலய பொறுப்பதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு கைது செய்யப்பட்வர் மற்றும் வலைகள் நீதிமன்றத்திற்கு சமர்பிங்ஙப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# தரைப்படையின் 24ஆம் பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் அனில் பெரேரா நியமனம்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை இராணுவத்தின் அம்பாறை 24 ஆவது பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் அனில் பெரேரா புதன்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

24 ஆவது டிவிசனுக்கு வந்தடைந்த புதிய பிரிவு தளபதிக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மகா சங்கத்தின் பிரித் சத்காயனா பின்னர், தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்டார்.

அம்பாறை புத்தங்கல ராஜகிய பண்டித திகவாபி சுசீம தேரர் இங்கு மூன்று இனங்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் பணிபுரியும் பலமும் துணிவும் புதிய பிரிவு தளபதிக்கு கிடைக்குமென ஆசிர்வதித்துள்ளார். அதன்பின் 24 ஆவது பிரிவு வளாகத்தில் மரம் இராணுவதளபதியினால் நடப்பட்டது.

இந்நிகழ்வில் 24 ஆவது படைப் பிரிவின் கீழ் உள்ள படையணிகளின் பிரிவுத் தளபதிகளும் கலந்துகொண்டு புதிய பிரிவுதளபதி மேஜர் ஜெனரல் அனில் பெரேராவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.(05)



## கர்தினாலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு பதிலளிக்கும்வகையில், கோட்டாபய ராஜபக்ச நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாக்குதலை நடத்திய குழுக்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் அவ்வேளையில் ஆட்சியில் இருந்த ஆளும்தரப்பின் உயர்மட்ட பிரிவான குற்றப்புலனாய்வுப் பிரிவினால்விசாரணைநடத்தப்பட்ட போதிலும், தாக்குதலுக்குமுன்னதாக சம்பந்தப்பட்டவர்களைகைதுசெய்ய முடியாது போனது.

தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து அவர்களின் அமைப்புகளை தடைசெய்யவேண்டும் என்பதால், ஆணைக்குழுவின்பரிந்துரைகளை அமுல்படுத்துவது கடினம் என நான் கர்தினாலிடம் கூறவில்லை.

நான் பதவிக்கு வந்ததும் அப்போதைய குற்றவியல் விசாரணைத்திணைக்களப்பணிப்பாளரை இடமாற்றம் செய்தேன் எனவும், விளக்கமறியலில் வைத்தேன் எனவும் கூறப்படும் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றேன். பொலிஸ் ஆணைக்குழுவினால்வழங்கப்பட்ட இடமாற்றங்கள் அவை.

அந்தத் தரப்பினரின் பொறுப்புகளை புறக்கணிக்க அல்லது வெளிப்படையாக அவர்களை விடுவிப்பதற்காக கர்தினால் செயற்படுகிறார், என் மீதான தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை பொதுமக்கள்கவனமாகஅவதானிக்க வேண்டும் என்றுள்ளது.

## நிலுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்கள் அடிப்படை உரிமைகள் தொடர்பான மனுவை சமர்ப்பித்து 14 மாதங்கள் ஆகியும் இன்றுவரை பரீட்சைநடத்தப்படாததால் 22,000 ஆசிரியர்களை பணியமர்த்தும் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் எதிர்வரும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்படவேண்டுமென எதிர்க்கட்சியின்பிரதமஅமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

அத்துடன், மாகாண மட்டத்தில் 15,000 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், மேல்மாகாணத்தில் தற்போது ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுவருவதாகவும்ஏனைய மாகாணங்களிலும் தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

35% அதிகரித்துள்ளன. கடன் வட்டியை திருப்பிச்செலுத்துவதிலும் 114% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளும் 60% ஆக அதிகரித்துள்ளன. பொதுக் கடனின் மூலதனத்தை திருப்பிச் செலுத்துவதிலும் 177% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 93,670 மில்லியன் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ளது. ஆனால்2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 117,107 மில்லியன் ரூபா நலன்புரி உதவிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. இது 2020 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் 25% வளர்ச்சியைக் காண்பிக்கிறது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அரச வருமானம் 6சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்தவருடத்தின்முதல்காலாண்டில் 787 பில்லியன் ரூபா அரச வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாம் 834 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளோம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 430 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. இலங்கை சுங்கம் 354 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. மதுவரி திணைக்களம் 51 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்நிலைபொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும். நாட்டில்சரியானநிதிமுகாமைத்துவம் காணப்படுவதையும் உறுதிசெய்ய முடிந்துள்ளது.

இவ்வாறான வருமான முறையைக் கருத்தில் கொண்டால் 2024ஆம் ஆண்டு வருமான இலக்குகளைஎட்டக்கூடியஆண்டாக அமையும் என நம்பலாம்.

அத்தோடு, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் படி, பெப்ரவரி மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 5.1% ஆக காணப்பட்டது. இது மார்ச் மாதத்தில் 2.5%மாக குன்றியது. அதேபோல் பெப்ரவரியில் 5.1% ஆக இருந்த உணவு பணவீக்கம் மார்ச் மாதத்தில் 0.7% ஆக கணிசமானக் குறைவைக் காட்டுகிறது.

இந்த அனைத்து தரவுகளும் நாட்டின் பொருளாதார நிலைமை சுமூகமான தன்மையை அடைந்துள்ளதை உறுத்திப்படுத்துகின்றன என்றார்.

## கடவுளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பேராயர் கர்தினால்மல்கம்ரஞ்சித்ஆண்டகை குறிப்பிட்டுவிடயத்தைசபையில்பதிவு செய்ய விரும்புகிறேன். 'ஜனாதிபதி விசாரணைஆணைக்குழுஅறிக்கை கிடைத்தவுடன் அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச தொலைபேசி அழைப்பை எடுத்து, அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவது கடினம் ஏனெனில் பரிந்துரைகளை செயற்படுத்தும் போதுஎனக்குநெருக்கமானவர்களை கைது செய்யவும், அவர்களின் அமைப்புக்களை தடை செய்யவும் நேரிடும்' என்று குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் நியாயத்தை பெற்றுக்கொள்ள சர்வதேசத்தை நாடுவதாக பேராயர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதால் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும்.போர் விவகாரம் ஜெனிவாவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது முடிவடைந்து விட்டது என்று எண்ண வேண்டாம். நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

பொருளாதார படுகொலையாளிகள், பொருளாதார குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வருடாந்த கூட்டத்தொடரில் குறிப்பிட்டது. இதனைத் தொடர்ந்து பொருளாதாரபடுகொலையாளிகளின் பெயரை எமது உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியது. ஆகவே சர்வதேச விசாரணைகளை அலட்சியப்படுத்த முடியாது.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை முழுமையாக சர்வதேசத்துக்குப் பொறுப்பாக்க விரும்பவில்லை. உள்ளகமட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு நியாயத்தை நிலை நாட்டுங்கள் என்றே சர்வதேசம் குறிப்பிடுகிறது.

இவ்விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிறந்த திட்ட யோசனைகளை கத்தோலிக்க சபைக்கு முன்வைத்துள்ளார். எமது ஆட்சியில் சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படும் அதற்காக விசேட விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படும். அத்துடன் விசாரணை அலுவலகமும்,விசேட நீதிமன்ற கட்டமைப்பும் ஸ்தாபிக்கப்படும்.

எமது ஆட்சியிலேயே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு தரப்பினர் தனக்கு தகவல்களை வழங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.அதுஉண்மையாக இருக்கலாம் ஏனெனில் நிலந்த ஜயவர்தனதனதுதொலைபேசியின் தகவல்களை அழித்துள்ளார்.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் முன்கூட்டியதாகவே அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் முறையாகச் செயற்படவில்லை. குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்குபுலனாய்வுப்பிரிவினர் இடமளித்துள்ளார்கள்.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டுக் கொண்டு கோட்டபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார். இவர் எப்.பி.ஐ. புலனாய்வு பிரிவுக்கு கடிதம் எழுதி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு கோரியுள்ளார். இதற்கு எப்.பி.ஐ. 'முழுமையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். பயங்கரவாதிசஹ்ரானுடன்ஒன்றரை வருடகாலமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்த நபர் குறித்தும், ஐ.பி.முகவரி தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம்' என தெரிவித்துள்ளது. குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரியான கலீல் பயங்கரவாதியான சஹ்ரானுடன் தொடர்புக் கொண்டுள்ளார்.ஆகவே உண்மையை இவரும் அறிவார்.

நாட்டில் உள்ளக மட்டத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாவிடின் சர்வதேசத்தை விமர்சிப்பதை அனைத்து ஆட்சியாளர்களும் பழக்கமாக கொண்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இந்தியா இருந்ததாக தற்போதுகுறிப்பிடப்படுகிறது. ஆனால் குண்டுத்தாக்குதல் தொடர்பில் இந்தியாவே ஆரம்பத்தில் இருந்து எச்சரித்தது. குண்டுத்தாக்குதல் பின்னணியில் சர்வதேச சக்திகள் இருந்ததாக விசாரணைகளை மேற்கொண்ட எந்த ஆணைக்குழுவிலும் குறிப்பிடப்படவில்லை.

குண்டுத் தாக்குதல்களின் சாபத்தால் தான் முன்னாள் ஜனாதிபதி,பிரதமர் பதவி விலகினார். நாட்டை விட்டு தப்பியோடினார்கள். நாடு வங்குரோத்து நிலையடைந்தது. கடவுளின் நீதிமன்றத்தில் இருந்து எவரும்தப்பிக்கமுடியாது.பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தண்டனைக்குதயாராகவேண்டும் என்றார்.

## மக்கள்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார்.

மக்கள் போரட்டம் மீண்டும் ஏற்படாதவாறானபொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும். அதற்கு தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்த திட்டங்களால்பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும் என்றார்.

## வடக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த ஆளுநர் செயலக பணியாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்தார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர்
Kalaikkathir

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா கலந்துரையாடல்





முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா வருகின்ற 20.05.2024 திங்கள் அன்று நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்கமைப்பு வேலைத்திட்டத்தை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்னின்று மேற்கொண்டு வருகின்றது.

ஆலயத்திருப்பணிவேலைகளைமேற்கொள்ளும் பொருட்டுமுன்னாயத்தகலந்துரையாடல்புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் மேலதிக மாவட்ட அரச அதிபர்எஸ்.குணபாலன்தலைமையில்நடைபெற்றது.

வருகின்ற வைகாசி மாதம் 5 ஆம் திகதி திங்கள் பாக்குத் தெண்டல் நிகழ்வும் 12 ஆம் திகதி திங்கள் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் 20 ஆம் திகதி வைகாசிப் பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளமையும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம்,, கரைதுறைப்பற்றுபிரதேசசெயலாளர்திருமதிம.உமாமகள், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், முல்லை வலயக்கல்வி பணிமைனையின் உதவிப் பணிப்பாளர், மின்சாரசபையின் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், ஆலய நிர்வாகத்தினர், முல்லைத்தீவு மாவட்ட இராணுவ அதிகாரி, மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, மாவட்டத்தின் முப்படை அதிகாரிகள்,ஏனைய உத்தியோகத்தர்கள்எனப்பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# வவுனியா கடவுச்சீட்டுக் காரியாலயம் முன்பாக மோசடியாளர் 6 பேர் கைது

## பொதுமக்களுக்கு பொலிஸாரின் அறிவித்தல்



வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன் 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டு காரியாலயம் முன் மோசடிகள் இடம்பெற்றால்முறைப்பாடுகளைமேற்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவம்தொடர்பில்மேலும்தெரியவருவதாவது-

வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக பல மோசடிகள் இடம்பெறுகின்றன எனவும் அதற்கு பொலிஸாரும் உடந்தை எனத் தெரிவித்து கடந்த சில நாள்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனைத் தொடர்ந்து வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைய செயற்பட்ட தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புபிரிவின்பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க தலைமையிலான குழுவினர், அதிகாலை வவுனியா கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக சோதனையில் ஈடுபட்டதுடன் மோசடிகளில் ஈடுபட்டு வருபவர்கள் என சந்தேகத்தின் பேரில் ஆறு பேரைக்; கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க எதிர்வரும் நாள்களில் கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றால் தனது உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கமான 0718593520 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.(05)

# போதைப்பொருளுடன் கைதானவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவு

போதைப் பொருளுடன் கைதான ஊடகவியலாளரின்மகனை14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 08 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி ஒன்றில் கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆந் திகதி பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படையினரால் தகவல் ஒன்றின் அடிப்படையில் போதைப் பொருள்களுடன் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் சட்ட நடவடிக்கைக் கமைய 07 நாள்கள் தொடர்ச்சியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் கல்முனைநீதிமன்றநீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் குறித்த வழக்கு புதன்கிழமை விசாரணைகு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை சந்தேக நபருக்கு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அப்துல் கையூம் பிசால் அகமட் (வயது-24) என்ற சந்தேக நபர் நீண்டகாலமாக போதைப்பொருள்களை விநியோகம் செய்து வந்ததுடன் அவற்றைஉபயோகித்தும்வந்துள்ளார். இந்நிலையில் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்த சந்தேக நபர் கைதாகி உள்ளதுடன் போதைப்பொருள் பாவனைக்காக புனர்வாழ்வு முகாம்களில் சிகிச்சை பெற்றிருந்தார்.அத்துடன் சந்தேக நபரின் தந்தையார் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பிறை எப்.எம். இன் கட்டுப்பாட்டாளராகவும் அம்பாறை மாவட்டத்தில் சிரேஸ்ட ஊடகவியலாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

மேலும் குறித்த சந்தேக நபர் வசம் இருந்து 1 கிராம் 90 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பெரிய நீலாவணை விசேடஅதிரடிப்படையினரால்மீட்கப்பட்டுள்ளதுடன் கடந்த வெள்ளிக்கிழமை 17 ஆந் திகதி கைது செய்யப்பட்டு பெரிய நீலாவணை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

## மன்னாரில் நடந்தது



உள்நாட்டுஅலுவல்கள்அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகஸ் தர்களாகக் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் புதன்கிழமை மதியமளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைதி வழி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர.;

கோரிஅபிவிருத்திஉத்தியோகஸ்தர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கானமாதந்தகொடுப்பனவைஅரச சுற்றறிக்கைக்குஅமைவாக7500ஆக அதிகரித்துவழங்கு,பதில்கடமைக்கான கொடுப்பனவை வழங்கு இல்லா விட்டால் பதில் கடமையை நிறுத்து,





சம்பள உயர்வு, மேலதிக நேர கொடுப்பனவு, பதில் கடமை, காகிதாகி செலவுகள் உள்ளடங்களாக பல்வேறு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதில்பலவருடங்களாக நீடித்து வரும் இழுபறி நிலையை உடனடியாக நிவர்த்திசெய்துதருமாறு

வெளிக்கள கொடுப்பணவை 300 ரூபாஜுவில் இருந்து 3000 ரூபாவாக அதிகரி, காகிதாகி கொடுப்பனவை பெற்று தாருங்கள், அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்குசம்பந்தமற்ற வேலைகளைத்திணிக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட

காலைக்கதிர் Kalaikkathir




# இலங்கையில் தனிச்சிறப்புப் பெற்ற பைரவ சுவாமி வழிபாடு



வட இலங்கையில் ஊர்கள் தோறும், தெருக்கள் தோறும் பரவியுள்ள சிறப்பான வழிபாடு பைரவ வழிபாடாகும்.

பைரவ (வைரவ) வழிபாடு மிக எளிமையாக சூலம், மரம், கல் போன்றவற்றில் பைரவரை வரவழைத்து நிறைவேற்றப்படுவதை காணலாம்.

இது தவிர, வட இலங்கையில் ஊர்கள் தோறும் பைரவருக்கு தனியான சிறப்பான ஆலயங்கள் உள்ளன.

» இங்கெல்லாம் கிராமிய பாரம்பரியங்களுடன் சித்திரை, வைகாசி மாதங்களில் ஒரு செவ்வாய்/திங்கள்/வெள்ளி விளக்கு வைத்து மறுவாரம் பொங்கல் மடை பரவி சிறப்பு வழிபாடு செய்வதை காணலாம்.

» வளந்து பானை என்று சிறப்பாக புனித நீரெடுத்த பானையை கோயிலை சுற்றி வந்து அடுப்பில் ஏற்றி பொங்கி வழிபட காணலாம். ( இம்மரபுகள் தனியே விரிவாக பதிவு செய்தற்குரியன.)

» பைரவ மூர்த்திக்கான ஆலயங்கள் பலவற்றில் தேரேறும் கடவுளாக, திருவூஞ்சலாடும் பிரானாக, சப்பறப்பவனி காணும் தெய்வமாக பைரவர் அருளுகிறார்.

» தவிர, பூதவராஜர், அண்ணமார், சட்டைநாதர், என்று பல பெயர்களிலும் வடிவங்களிலும் இங்கு பைரவர் வழிபாடு பரவி உள்ளது.

» ஞான மூர்த்தியாகவும், கால பயம் அகற்றும் கால பைரவராகவும், நோயகற்றும் இறைவனாகவும் இவர் திகழ்கிறார்.

» சிவ வடிவம் கொண்ட மகாபைரவரை கபால சமர்ப்பணமாக வடை நெய்வேதித்து வடை மாலை சாற்றி வழிபடுவர்.

» பைரவர் அருளால் பிறந்த குழந்தைகளுக்கு க்ஷேத்திரபாலன் என்றும் ஆபதோத்தாரணன் என்றும் பெயரிட்டு மகிழ்ந்த மரபை கூட யாழ்ப்பாணத்தில் காணலாம்.

» இந்த பெயர்களில் பல புகழ் பெற்று விளங்கிய பைரவநாதக்குருக்கள், ஆபதோத்தாரணக்குருக்கள் என்று சிவாச்சார்யர்களும் இருந்துள்ளனர்.

» பரணி நாளிலும், அஷ்டமி திதியிலும், வெள்ளி, செவ்வாய் கிழமைகளிலும் பைரவ வழிபாடு சிறப்பாக செய்யப்படுகிறது.

» தவிர, பைரவரை நரசிம்ம மூர்த்தியோடு இணைத்து ந்ருசிம்ம பைரவராக வழிபடும் மரபும் வட இலங்கையில் உள்ளது.

» காவல் தெய்வமான பைரவர் ஆலயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சூழலிலும், புகழ் பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வளாக மத்தியிலும் இன்னும் இவ்வாறான பல இடங்களிலும் பல்லாண்டுகளாக இருக்க காணலாம்..

» நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற முக்கிய ஆலயங்களில் முதன்மையான மூர்த்திகளுள் ஒருவரான திரிசூல பைரவர் இருக்க காணலாம். இந்த மூர்த்தியிடம் திருவுளச்சீட்டு பெற்றே நல்லூரில் முக்கிய பணிகள் முன்னெடுக்கப்படுவதாக நம்பிக்கையும் உண்டு.

» இதை விட, வட இலங்கையில் பைரவ மூர்த்தியையே மூல மூர்த்தியாக கொண்ட பல நூறு ஆலயங்களை காணலாம்.

» பலவகை மரபை சார்ந்தவர்களும் தத்தம் முறையில் தத்தம் மரபில் இம்மூர்த்தியை இயல்பாக வழிபடுவர்.

» இலங்கையில் பல இடங்களில் பைரவ மூர்த்தி தேரிலும் பல்வகை வாகனங்களிலும் உலாவும் காணுவார்.

» உக்ர பைரவர், நரசிம்ம பைரவர், ஞான பைரவர், கால பைரவர் என்ற பெயர்களில் இங்குள்ள ஆலயங்களில் பைரவ மூர்த்தி தரிசனம் தருகிறார்.

» போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என்று எத்தனை எத்தனை ஆக்கிரமிப்புகள்... எவ்வளவு அட்டூழியங்கள்... நீண்ட யுத்தங்கள்... அழிவுகள்...இடப்பெயர்வுகளுமான... எத்தனை பிரச்சனைகள்... எல்லாவற்றையும் கடந்து நாமேதோ இன்றும் வாழ செய்பவர் பைரவரே.

» ஆபதோத்தாரண மூர்த்தியான இவர் சட்டைநாதர் என்ற பெயரிலும் பூதவராஜர் என்ற பெயரிலும் கூட பைரவ மூர்த்தி காட்சி தருகிறார்.

» இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி மிக்க சூழ் நிலையையும் கடக்க பைரவ மூர்த்தி தான் மனோ பலம், உடல் ஆரோக்கியம் அருள வேண்டும்.

நாமமுறு மூவிலைவேல் நாளலருஞ் செவ்வலரித்
தாமமணி மார்பிலங்கத் தண்டையொலி சலசலக்கச்
சேமமுறு காவல்மகிழ் சேத்திரபா லகன்படுகன்
காமருபூங்கழலிணைகள் கருத்தினிலுள் இருத்துவாம்
(திருக்கேதீச்சர மான்மியம்)

**மயூரகிரி சிவாச்சார்யார்**

# இராணுவ அதிகாரியின் நடைபயணம் நான்காவது நாளை எட்டுகின்றது



(பாறுக் ஷிஹான்)

இயற்கையின் அழகை அழகுபடுத்த நாளைய சுவாசம் என்ற தலைப்பில் 24 ஆவது கெமுனு சேவா படைப்பிரிவின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஷெல்டன் பெரேரா இலங்கையை கால்நடையாக சுற்றி வருவதற்கு தீர்மானித்திருக்கின்றார்.

இதன் முதற்கட்டமாக கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை மத்திய முகாம் லும்பினி கோவிலுக்கு அருகில் காலை தனது நடை பயணத்தை ஆரம்பித்தார்.

குறித்த நடைபயணத்தை மகா சங்கரத்தினரின் ஆசியுடன் பயணத்தை தொடங்கிய அவர் 53 நாளகளுக்குள் இந்த பயணத்தை முடிக்க திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் இந்நடைபயணத்தின் ஆரம்பமாக மத்திய முகாம் லும்பினி ஆலய முன்றிலில் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் வருகை தந்து இந்த நடை பயணத்தில் ஈடுபடும் 24 ஆவது கெமுனு சேவா படைப்பிரிவின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஷெல்டன் பெரேராவிற்கு மாலையணிவித்து ஆசிர்வதித்தனர். நான்கு காரணங்களின் அடிப்படையில் இந்த நடைபயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

அனைத்து இனங்கள் மற்றும் அனைத்து மதத்தினரிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஊக்குவித்தல்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல்

நல்ல உடல் ஆரோக்கியத்துடன் அடுத்த தலைமுறைக்கு முன்னுதாரணமாக இருத்தல்

இயற்கையின் அழகை அழகுபடுத்த நாளைய சுவாசம் என்ற தலைப்பில் ஒவ்வொரு நாளும் பயணத்தின் தொடக்கத்தில் ஒரு செடியை நடுவது இந்த நடைப்பயணத்தின் அடிப்படையாக இருந்து வருகிறது.

கடந்த 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரை கல்முனைக்கு சென்று அங்கிருந்து கடல் மார்க்கமாக பயணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இன்று ஆரம்பமாகவுள்ள இப்பயணம் முதல் நாள் காத்தான்குடியில் நிறைவடைந்து அங்கிருந்து அன்றைய தினம் காத்தான்குடியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் நிறுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பயணம் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் ஆகும் என்பதுடன் இந்த பயணத்தை 52 நாள்களுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.(05)

# ரயிலில் படிக்கட்டில் தொங்கியபடி செல்வதற்கு அனுமதி இல்லை

## ரயில்வேத் திணைக்களம் அறிவிப்பு

ரயிலில் படிக்கட்டுகளில் தொங்கிய படி செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ரயில் திணைக்கள மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக மலையகத்திற்கும் செல்லும் ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிப்பதால் பல விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண, பயணிகள் ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ரயில் காவ லர்கள் மற்றும் இதர அதிகாரிகளுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், மலையக ரயில் மார்க்கத்தில் கடுகதி ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் விபத்துக்கள் ஏற்படுவது கவலை அளிக்கிறது.

ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணிக்க வேண்டாம் என்று ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் அறிவித்தாலும், சுற்றுலாப் பயணிகள் அவ்வாறு செல்வதைத் தடுக்க கடினமாக உள்ளது. பெரும்பாலானவர்கள் அதிகாரிகளால் தாங்கள் துன்புறுத்தப்பட்டுவதாக ரயில்வேத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்கின்றனர். அத்தோடு, சமூக ஊடகங்களில் மோசமான கருத்துக்களை பதிவிடுகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

ரயில்களில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணம் செய்வது தொடர்பாக தற்போது எந்த விதிகளும் நிபந்தனைகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், விபத்துக்கள் ஏற்பட்டால் நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம் என திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஹியா ரயில் நிலையத்திற்கு அருகில் பொடி மெனிகே கடுகதி ரயிலில் படிக்கட்டுகளில் தொங்கிய படி பயணம் செய்த வெளிநாட்டுப் பெண் ஒருவர் தவறி விழுந்தார்.

இதேபோல், சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, ஈரானிய சுற்றுலாப் பயணி ஒருவர் தவறி விழுந்து பலத்த காயம் அடைந்தார்.

இதுபோன்ற ஆபத்தான பயணங்களை சுற்றுலாப் பயணிகள் மேற்கொள்வதைத் தடுக்க ரயில் காவலர்களும் பாதுகாப்பு அதிகாரிகளும் தீவிர நடவடிக்கை எடுப்பதன் அவசியத்தை பயணிகள் எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## ஓய்வூதியர் வருடாந்த பொதுகூட்டம் ஞாயிறு!

(ஏ.எல்.எம்.சலீம்)

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் பிரதேசக்கிளையின் 21 ஆவது வருடாந்தப்பொதுக்கூட்டம்எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர்க்கிளைத் தலைவர் ஏ.எல்.மஹ்றூப் தலைமையில், நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலை மர்ஹூம் அஷ்ரப் ஞாபகர்த்த மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அத்துடன் நிந்தவூர் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல்.சாஜிதா பர்வீன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன், ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி ஏ.எம்.ஜாபிர் அம்பாறை மாவட்ட அரச சேவை ஓய்வுதியர் நம்பிக்கை நிதிய செயலாளர் ஏ.உதுமாலெவ்வை, எம்.ரி.நௌபல் அலி (அதிபர்) ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் பிரதேச கிளையில் நீண்டகால உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் சேவையாற்றியமைக்காக இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நால்வர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர் என நிந்தவூர்ஓய்வூதியர்நம்பிக்கைநிதிய கிளைச் செயலாளர் தேசமானிய எம்.ஏ.அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இதன்படி நிந்தவூர் நலன் புரிச்சபையின் தலைவரும், ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான எம்.எச்.யாகூப் ஹஸன், ஓய்வு நிலை நீதிமன்ற முதலியார் ஏ.எஸ்.இப்றாகீம், ஓய்வு நிலை விரிவுரையாளர் ஏ.எல்.எம்.பஸீர், ஓய்வு நிலை அதிபர் கலாபூஷணம் எம்.செயினுலாப்தீன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர் எனவும் செயலாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

தவிரவும் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர்பிரதேசக் கிளையின் கோரிக்கையை ஏற்று, கிளைக்கென நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல்லாத்தீப் காணித்துண்டு ஒன்றை அண்மையில் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

50 அடி நீளமும், 50 அடி அகலமும் கொண்டு நிந்தவூர்தக்குவா சதுக்கத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இந்தக் காணியில், நூலகம், ஓய்வூதியர் பொழுதுபோக்கு அம்சங்கள், கூட்ட மண்டபம் கொண்ட நிரந்தர அலுவலகக் கட்டடமொன்றை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகச் செயலாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தக் காணியை அடையாளப்படுத்தும் வகையில், மேற்படி ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய கிளைப் பெயர்ப்பலகையை பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லத்தீப் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

அரசசேவை ஓய்வூதியர்களின் முக்கியத்துவம் கருதி மேற்படி காணியை ஒதுக்கீடு செய்துள்ளமைக்காக நம்பிக்கை நிதிய நிந்தவூர்க்கிளை பிரதேச செயலாளருக்குப் பெருநன்றி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2024இல் வெளியிடப்பெற்றது